## JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU
## CC No.184/2018

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw17/Pw4 |
| Name | : Govindaraj |
| Father/Husband's Name | : Ayyaru |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 53 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27.02.2026.

**Accused absent.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது அம்பத்தூர் சட்ட ஒழுங்கு பிரிவு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 23.08.2017 அன்று கூடுவாஞ்சேரி காவல்நிலையத்தில் பணியிலிருந்த போது, எங்கள் காவல்நிலையத்தில் பணிபுரிந்த திரு. கோபால் சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்களின் கையெழுத்து மற்றும் விசாரணை அணுகுமுறை நன்கு பரிசீலனை என்பதாலும், மேலும் இவ்வழக்கின் விசாரணை அதிகாரி என்ற முறையிலும் நான் அவருக்காக சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கின் மேற்சொன்ன சிறப்பு உதவி ஆய்வாளர் பணியிலிருந்த போது, சீனிவாசன், கிராம நிர்வாக அலுவலர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பெற்று நிலைய குற்ற எண்.865/2017 இதச பிரிவுகள் 279,337 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். அந்த புகார் மனு **அதசா.ஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த முதல் தகவல் அறிக்கை **அதசா.ஆ2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் காயப்பட்ட நபர் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்தவிட்ட தகவலின் பேரில், சட்ட பிரிவுகள் 279,337 இதச பிரிவிலிருந்து சட்ட பிரிவுகள் 279,304(A) வாக பிரிவு மாற்றம் செய்து, பிரிவு மாற்ற

அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த பிரிவு மாற்ற அறிக்கை **அதசா.ஆ3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் வழக்கு கோப்புகளை பிரிவு மாற்ற செய்து, சிறப்பு உதவி ஆய்வாளர் என்னிடம் சமர்பித்ததை நான் பெற்று, மேற்கொண்டு புலன் விசாரணை செய்தேன்.

பின்னர் வழக்கின் சம்பவ இடம் சென்று, சாட்சிகள் செல்வராஜ் மற்றும் துரை ஆகியோரை முன்னிலையில் சம்பவம் இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவைகள் முறையே **அதசா.ஆ4 மற்றும் அதசா.ஆ5 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் 1 முதல் 7 வரை உள்ளோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் இவ்வழக்கில் நிலையம் ஆஜரான எதிரியை உரிய காரணம் கூறி, கைது செய்து, இருநபர் பிணையில் விடுவித்தேன்.

இவ்வழக்கில் விபத்தில் காயப்பட்ட நபருக்கு முதலுதவி சிகிச்சை அளித்த குரோம்பேட்டை அரசு மருத்துவர் சுப்புராஜ் என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் அளித்த விபத்து பதிவேடு **அதசா.ஆ6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர், இவ்வழக்கில் இறந்துபோன நபரின் பிரேதம் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்ததை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அதசா.ஆ7 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

பின்பு, இவ்வழக்கில் இறந்து போன நபரின் இறப்பிற்கான உண்மையான காரணம் அறியும் பொருட்டு தலைமை காவலர் 1136 பாபு என்பவர் மூலம் பிரேதத்தை உடற்கூராய்வு செய்ய வேண்டுக்கொள் கடிதம் கொடுத்து அனுப்பினேன்.

பின்னர், இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் சோமசுந்தரம் என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். அவர் அளித்த அந்த மோட்டர் வாகன ஆய்வறிக்கை **அதசா.ஆ8 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

பின்னர் இவ்வழக்கில் இறந்து போன நபரின் உடலை உடற்கூராய்வு செய்த சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவர் யுகேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அவர் அளித்த உடற்கூராய்வு அறிக்கை **அதசா.ஆ9 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

பின்னர் இவ்வழக்கில் எனது புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை:**

சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், புகார்தாரரிடமிருந்து புகார் பெறவில்லை என்றாலும், அதன் பேரில், சம்பவ இடம் செல்லாமல், காவல்நிலையத்தில் வைத்து, பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றாலும், சரியல்ல. சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. சரிவர சாட்சிகளை விசாரிக்காமல் எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.